ஆரம்ப சுகாதார நிலையங்கள் இல்லாத இடங்களில், ஒவ்வொரு கிராமமாகச் சென்று அங்கே இருக்கக்கூடிய மரத்தடியில் அந்த நடமாடும் மருத்துவமனையை நிறுவிக்கொண்டு, அங்கே நோயாளிகளை அழைத்து அவர்களுக்கு தொற்றும் நோய்கள், தொற்றா நோய்கள் போன்ற எல்லா நோய்களுக்கும் மருத்துவம் பார்க்கின்ற அளவிற்கு இந்தியாவிலேயே ஒரு நடமாடும் மருத்துவமனைத் திட்டத்தைத் தொடங்கி, அங்கு கிராமப்புற சுகாதாரத் திட்டத்தை உறுதிப்படுத்தக்கூடிய மாநிலம் நம்முடைய தமிழ்நாடு என்ற பெயரைப் பெற்றிருக்கின்றது, விருதினைப் பெற்றிருக்கின்றது. இருப்பினும், அதையும் தாண்டி தாங்கள் சொல்லியிருக்கக்கூடிய இரண்டு, மூன்று கோரிக்கைகளையெல்லாம் இங்கே நான் பதிவு செய்துகொண்டேன். தங்களுக்கு திருப்தி ஏற்படக்கூடிய நடைமுறையை நான் ஏற்படுத்தித் தருகின்றேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 219, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

219—

வேளாண்மை விற்பனை நிலையம்

***4840—திரு. பி.வி. பாரதி:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதியில் புதிய வேளாண்மை விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு, வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. துரைமுருகன், என்னவென்று சொல்லுங்கள். எனக்குத் துணையாகப் பேசுங்கள்.

திரு. துரைமுருகன்: உங்களுக்குத் துணையாகத்தான் பேசுகின்றேன். நான் எப்போதுமே உங்களுக்கு 'For'தான் சார். இன்றைக்கு Police Department Demand.**

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2018 ஜூன் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அந்தமாதிரியெல்லாம் இல்லை. ** ஆகையினால்தான் நான் அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டியதாக இருக்கின்றது. (குறுக்கீடு) இல்லை, இல்லை. நீங்கள் கூறியது அவைக் குறிப்பில் எதிர்காலத்தில் இருக்க வேண்டாம். எனவே, நான் கூறியதையும் சேர்த்து அதை எடுத்துவிடலாம். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கின்றேன்.*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதியில் ஏற்கெனவே ஒரு வேளாண்மை விற்பனை நிலையம் 1962 முதல் செயல்பட்டு வருவதால், புதிய வேளாண்மை விற்பனை நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள்.*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களைப் பணிவோடு வணங்குகிறேன். நாங்கள் வணங்குகின்ற தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் தலைவணங்கி என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோல, என்னுடைய சீர்காழி தொகுதியில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம், வாடகைக் கட்டடத்தில் 1962 ஆம் ஆண்டிலிருந்து இயங்கி வருகிறது. நாங்கள் புதிய

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கேட்கவில்லை. ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நிரந்தரக் கட்டடம் வேண்டுமென்ற கோரிக்கையைத்தான் நான் இந்த நேரத்தில் வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். ஏனென்று சொன்னால், அந்த வாடகைக் கட்டடம் இருக்கின்ற இடம், எங்களுடைய ஊரைச் சேர்ந்த மிகப் பெரிய தனவந்தரான குடமுருட்டி பண்ணை அவர்களுக்குச் சொந்தமான இடம். 'சொல்லவும் முடியவில்லை, விழுங்கவும் முடியவில்லை' என்று சொல்வார்கள். அதுபோன்று அரசுக் கட்டடத்தை, அரசு நிறுவனத்தை அப்புறப்படுத்தவும் அவர்களால் முடியவில்லை. இன்றைக்கு அவர்கள் அந்தளவிற்கு நலிவடைந்த நிலைக்கு வந்துவிட்டார்கள். குறிப்பாக, விவசாயிகளைப் பற்றிச் சொல்லவேண்டுமென்று சொன்னால், விவசாயத்தை 100 சதவிகிதம் நம்பியிருக்கின்ற எங்களுடைய கடைமடைப் பகுதி விவசாயிகள், புஞ்சை தானியங்களையும், நஞ்சை தானியங்களையும் விற்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்து, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு நிரந்தரக் கட்டடம் கட்டித் தரவேண்டும். அதற்கு வருவாய்த் துறைமூலம் இரண்டு இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்து, அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் விற்பனைக் குழுவின்கீழ் இயங்கும் சீர்காழி ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் 26–12–1962 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சீர்காழி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு சீர்காழி வட்டம், எர்கூர் கிராமம் புலம் எண் 67/10–ல் 1 ஏக்கர் 4 சென்ட் நிலத்திற்கு அரசின் வழிகாட்டு மதிப்பான ரூ.2,11,040/– செலுத்தப்பட்டு, விற்பனைக் கூடத்தின் பெயரில் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. 3–5–2018 அன்று நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் செயல்முறைகளின்படி முன்னுழைவு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்விடத்தில் அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், சீர்காழி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் 2017–2018 ஆம் ஆண்டு 18,013 மெட்ரிக் டன் விளைபொருட்கள் விவசாயிகளால்

2018 ஜூன் 26]

பரிவர்த்தனை செய்யப்பட்டு, அதன்மூலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு ரூ.29,00,000/– வருவாய் பெறப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. பாரதி அவர்கள், நன்றியா? நன்றிதானே சொல்லப்போகிறீர்கள்?*

திரு. பி.வி. பாரதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 46 ஆண்டுகளாக ஒரு வாடகைக் கட்டடத்திலே, வேளாண் துறை சார்பான ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் இயங்கி வருகிறது என்பது வேதனைபடக்கூடிய ஒரு விஷயம் ஆகும். இங்கிருக்கின்ற துறைச் செயலாளர் அவர்களையும் நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது என்னவென்றால், ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களுக்கு நிரந்தரக் கட்டடங்கள் அமைக்கின்ற நேரத்திலே, அந்த விற்பனைக் கூடம் எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது; அதனுடைய தேவைகள் என்னென்ன; என்பனவற்றை அறிந்து மிக விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும். அந்த ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு இடமும் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, நிரந்தர ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கட்டடம் கட்டித் தரவேண்டுமென்று பணிவன்போடு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, விரைவில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 220, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*